(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 ஒக்டோபர் 03 திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த,** நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர**

**கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட**

**கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன**

**கௌரவ லலித் எல்லாவல**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

கௌரவ சாகர காரியவசம்
கௌரவ ஜயந்த கெட்டகொட
கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல
கௌரவ லலித் வர்ண குமார
கௌரவ மனோ கணேசன்
கௌரவ உதய கம்மன்பில
கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன
கௌரவ யதாமிணீ குணவர்தன
கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா
கௌரவ மிலான் ஜயதிலக்க
கௌரவ பியங்கர ஜயரத்ன
கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன
கௌரவ தயாசிறி ஜயசேக்கர
கௌரவ ஜீவன் தொண்டமான்
கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா
கௌரவ துமிந்த திசாநாயக்க
கௌரவ எஸ். பீ. திசாநாயக்க
கௌரவ மயந்த திசாநாயக்க
கௌரவ விமலவீர திசாநாயக்க
கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த
கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன
கௌரவ எச். நந்தசேன
கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த
கௌரவ அசங்க நவரத்ன
கௌரவ வாசுதேவ நாணாயக்கார
கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்
கௌரவ கிங்ஸ் நெல்சன்
கௌரவ புத்திக பத்திறண
கௌரவ நிமல் பியதிஸ்ஸ
கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்
கௌரவ டிலான் பெரேரா
கௌரவ நிரோஷன் பெரேரா
கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா
கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்
கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே
கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி
கௌரவ உத்திக பிரேமரத்ன
கௌரவ ரோஹண பண்டார
கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்
கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

**கௌரவ மொஹமட் முஸம்மில்**
**கௌரவ வசந்த யாப்பாபண்டார**
**கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர**
**கௌரவ இஷாக் ரஹுமான்**
**கௌரவ முஜிபுர் ரஹுமான்**
**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**
**கௌரவ குணதிலக ராஜபக்ஷ**
**கௌரவ சமல் ராஜபக்ஷ**
**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**
**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**
**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**
**கௌரவ எம். ராமேஷ்வரன்**
**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**
**கௌரவ காமினி லொக்குகே**
**கௌரவ காமினி வலேபொட**
**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**
**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**
**கௌரவ சமிந்த விஜேசிறி**
**கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான**
**கௌரவ மதுர விதானகே**
**கௌரவ ஹேஷா விதானகே**
**கௌரவ சந்திம வீரக்கொடி**
**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**
**கௌரவ டீ. வீரசிங்க**
**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**
**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**
**கௌரவ ஜகத் சமரவிக்ரம**
**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**
**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**
**கௌரவ வடிவேல் சுரேஷ்**
**கௌரவ ரஊப் ஹகீம்**
**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**
**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**
**கௌரவ சமன்பிரிய ஹேரத்**
**கௌரவ மர்ஜான் பளீல்**

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1 **சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2022 செத்தெம்பர் 26 ஆம் திகதி ‘இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் (திருத்தம்)’ எனும் சட்டமூலத்தில் சான்றுரை என்னால் எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். “

**II**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ‘புனர்வாழ்வுப் பணியகம்’ எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**III**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ (திருமதி) டயனா கமகே

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ கபிர் ஹசீம்

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ வசந்த யாப்பாபண்டார

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய"

**IV**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல் 2022 ஆகஸ்ட் 29 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையின் பிரகாரம் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ ஜகத் புஷ்பகுமார

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சாந்த பண்டார

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ நிமல் லான்சா

கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ ஜகத் குமார சுமித்ராரரச்சி

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ மதுர விதானகே

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார"

**V**

"பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2022 ஆகஸ்ட் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமையவும் பிரதிச் சபாநாயகரை தவிசாளராகக் கொண்ட சட்டவாக்க நிலையியற் குழுவில் பணியாற்றுவதற்காக குழுக்களின் பிரதித் தவிசாளர் உள்ளிட்ட பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் :—

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ மதுர விதானகே

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க"

2. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர்—

(i) 2005 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ், பெறுமதி சேர் தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு 2022 மே 31 ஆம் திகதிய 2282/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22(1) ஆம் பிரிவின் கீழ் போத்தலில் இடப்பட்ட கள்ளின் மீதான மதுவரி தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2277/62 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 03/2022);

(iii) காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் எத்தைல் மதுசாரத்திற்கான மதுவரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 யூன் 08 ஆம் திகதிய 2283/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2022); மற்றும்

(iv) 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் புறப்படுகை அறவீடு தொடர்பில், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மார்ச் 27 ஆம் திகதிய 2272/53 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் மற்றும் அறிவித்தல்கள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர்—

(i) 2012, 2013, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் ஆண்டறிக்கைகள்; மற்றும்

(ii) 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான சமுத்திர பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கைகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) கல்வி அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான இலங்கை போக்குவரத்து சபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அலுவல்கள் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,2020 ஆம் ஆண்டுக்கான தி அஸோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடெட்டின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை வெகுசன ஊடக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான நீர் வளங்கள் சபையின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை நீர் வழங்கல் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான மருந்துகள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(9) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் மற்றும் கணக்கறிக்கைகளை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(10) மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர், 2020 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா மின்சார (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து அவ்வறிக்கை மின்சக்தி மற்றும் வலுசக்தி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) மட்டக்களப்பு, கோவிந்தன் வீதி, இல. 54 ஈ யில் வதியும் திரு. வீ. கணேசானந்தமினது 2021.08.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன் சமர்ப்பித்தார்.

(2) மொனராகல, பன்சலவிற்கு முன்னால், சிரிவிஜயபுர எனும் முகவரியில் வதியும் திருமதி சுனீதா விஜேசிங்கவினது 2022.08.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சந்திம வீரக்கொடி சமர்ப்பித்தார்.

(3) மொனராகல, ஹிந்திகிவுல, ரத்மல் மாவத்தை, 23 ஆம் கம்பம், எனும் முகவரியில் வதியும் திருமதி சுதர்மா சந்திரகா கொண்டதெனியவினது 2022.08.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன சமர்ப்பித்தார்.

(4) ராகம, கென்தலியத்த பாலுவ, இல. 531 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ. சந்திரசோமவினது 2022.09.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை எம். டப்ளியூ.டி. சஹன் பிரதீப் விதான சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

(மு.ப. 11.35 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.02 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

**4. கண்டிய திருமண, மணநீக்கம் (திருத்தம்):** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — (113 ஆம் அத்தியாயமான) கண்டிய திருமண, மணநீக்கச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்:— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும் 2022 ஆகஸ்ட் 09 மற்றும் 12 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைகளினால் தடைபெறாமல், 2022 ஒக்தோபர் 04 ஆம் திகதி முதற்கொண்டு, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரின் போதான செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை, வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு சமர்ப்பித்தார்:— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 27 ஆம் இலக்கப் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. பேரவையை ஸ்தாபிப்பதற்கான தீர்மானம் மீதான திருத்தம்:** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு சமர்ப்பித்தார்:— 2022 செப்தெம்பர் 20 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் பந்தி (ஈ) ஐ உடனடுத்து பின்வரும் பந்திகள் சேர்க்கப்படுவதன் மூலம் அத்தீர்மானமானது திருத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

"(உ) தேசியப் பேரவையானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணங்களைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசீலனை செய்வதற்கும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்; மற்றும்

(ஊ) பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளிலுள்ள குழுக்களுக்கான பொது விதிகள் தேசியப் பேரவைக்கும் ஏற்புடையதாகும்."

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 3.00 மணிக்கு, குழுக்களின் பிரதித் தவிசாளரால் பாராளுமன்றம் பாராளுமன்றம் 2022 ஒக்டோபர் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது